பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 27 செவ்வாய்க்கிழமை 13.12.2022 கதிர் 38

**இனி து ரகசியம் அல்ல!**

ஊசலாடுகின்றது உள்ளூராட்சித் தேர்தல். அதை முற்கூட்டியே அறிவித்து நடத்துவதற்கு வாய்ப்பும், அதிகாரமும், சந்தர்ப்பமும் இருந்தும் கூட, அதனைச் செய்யாமல் இழுத்தடித்து வருகின்றது தேர்தல் ஆணையம்.

இந்தத் தேர்தலை ☞2

# பேச்சுக்கு இந்தியா தலைமையில் அமெ., பிரி., கனடா மேற்பார்வை!

## ரெலோவின் தலைவர் செல்வம் நேற்று வலியுறுத்து இன்று ஜனாதிபதியின் கூட்டத்துக்குப் போக முன்பு



(வவுனியா நிருபர்: கி.வசந்தரூபன்)

வவுனியா,டிசம்பர் 13

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை தொடருமாக இருந்தால் இந்தியாவின் தலைமை மேற்பார்வையின் கீழ் பிரித்தானியா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் மேற்பார்வை இருக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். ☞2

## புதுவருடத்தில் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கூட்டத் திடீர் முடிவு!



இன்றைய தினம் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற அமர்வுகளின் பின்னர் புதிய வருடத்தின் நாடாளுமன்ற அமர்வை ஜனவரி 05ஆம் திகதி நடத்துவதற்கு நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முன்னர் புதுவருடத்தில் ஜனவரி 17 ஆம் திகதியே முதலாவது நாடாளுமன்ற அமர்வை ☞10

## வட – கிழக்கு மாகணங்களில் 1,660 கால்நடைகள் மரணம்



கடும் குளிரான காலநிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உயிரிழந்த விலங்குகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உயிரிழந்த விலங்குகளின் எண்ணிக்கை ☞10

## விபத்தை ஏற்படுத்திய சாரதி உடன் டுபாய்க்குத் தப்பினார்



கொழும்பு, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தையில் உள்ள இரவு விடுதிக்கு சென்று திரும்பும் போது விபத்தை ஏற்படுத்திய சொகுசு காரின் சாரதி, விபத்து இடம்பெற்ற சில மணி நேரங்களில் ☞10

## யாருடனும் கூட்டுக்குத் தயார்; மொட்டுக் கட்சி திட்டவட்டம்!

நாட்டின் நலனுக்காக அரசியல் கட்சி கொள்கைகளை மாற்றியமைப்பதில் தவறேதும் கிடையாது. எனவே அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்காகவும், நாட்டின் எதிர்காலத்திற்காகவும் எத்தரப்பினருடனும் கூட்டணி அமைக்க தயார். ☞10





## இந்திய கடற்படைத் தளபதி இன்று இலங்கை வருகிறார்!

இந்திய கடற்படைத் தலைவர் அட்மிரல் ஆர் ஹரி குமார் இன்று செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு நான்கு நாள் பயணத்தை தொடங்கவுள்ளார்,

இலங்கை தேசத்தின் மீது சீனாவின் தொடர்ச்சியான முயற்சிகள் குறித்த கவலைகளுக்கு மத்தியில் ஒட்டுமொத்த இருதரப்பு கடல் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீன உளவுக் ☞10

## ஜன. நடுப்பகுதியில் வேட்புமனு ஏற்பு பெப்ரவரி நடுப்பகுதியில் வாக்களிப்பு

### தேர்தல் ஆணையாளர் நாயகம் தகவல்

கொழும்பு,டிச.13

24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகளுக்கு 8,327 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை டிசம்பர் இறுதி வாரத்தின் 5 வேலை நாள்களுக்குள் தேர்தல்கள் ஆணைக் குழு வெளியிடும் என அதன் ஆணையாளர் நாயகம் எஸ்.ஜி.புஞ்சிஹேவா நேற்றுத் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழு கடந்த வாரம் நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைக் ☞10

## தேர்தலுக்கு உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றில் இரு மனுக்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி எதிர்க்கட்சி ☞10

## டயானாவுக்கு எதிரான வழக்கு ஜனவர் 26 இல் விசாரணக்கு!

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதிவிசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதியரசர்கள் சோபித ராஜகருணா மற்றும்தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு இந்த முடிவை நேற்றுத் தெரிவித்துள்ளது.

## வாள்கள், கூரிய ஆயுதங்களுடன் பிரதேச சபை உறுப்பினர் கைது

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் இன்று வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார். சங்கரத்தை துணவி பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் விசேட சுற்றிவளைப்பு ☞10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தாமல் தள்ளிப் போட்டு விட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் அரசுத் தலைமைக்கு, அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான கால அவகாசத்தை வழங்கவே இந்த இழுத்தடிப்பு என்பது எதிர்க் கட்சிகளின் அனுமானம்; அச்சம்.

அதனால்தான் அவை உயர்நீதிமன்றத்திற்கு சென்றிருக்கின்றன. தேர்தலை நடத்துவோம் என்று உறுதி மொழியை தேர்தல் ஆணையத்தை நீதிமன்றுக்கு இழுத்து அங்கு வைத்துப் பெறுவதே எதிர்கட்சிகளின் திட்டம்.

இலங்கை நீதிமன்றங்கள் - குறிப்பாக மீயுயர் நீதி ஆயமான உயர் நீதிமன்றம் - தேர்தல் ஒத்திவைப்புக்கு இலகுவில் இடம் அளிப்பதில்லை.

அந்த வகையில் பொதுத்தேர்தல், ஜனாதிபதி தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு, மாகாண சபைத் தேர்தல் போன்ற வற்றையே மக்கள் தமது இறைமையை வெளிப்படுத்தும் வாக்களிப்புகள் என்று உயர் நீதிமன்றம் கருதுகின்றது. அதனால் அவற்றை தள்ளிப் போடுவதற்கு இலங்கை உயர்நீதிமன்றம் இலகுவில் இசைவு காட்டுவதில்லை.

ஆனால், இது உள்ளூராட்சித் தேர்தல். இது மக்கள் தமது இறைமையைப் பிரயோகித்து வெளிப்படுத்தும் ஒன்றாக சட்டமோ, உயர் நீதிமன்றமோ கருதுவதில்லை. ஆயினும், அதன் ஒத்திவைப்பை உயர் நீதிமன்றம் எக்காரணம் கொண்டும் ஏற்காது என்று கருதி, அந்த நம்பிக்கையில், அதன் அடிப்படையில், இந்த மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றனர் எதிர்க்கட்சி எம்.பிக்கள்.

இந்த மனுக்களை இந்த வாரத்தில் மன்றில் எடுக்கச் செய்வது எதிர் அணியின் திட்டம். ஆனாலும் அந்தத் திட்டத்துக்கும் அல்வா கொடுக்க அரசு தரப்பு தயார் என்று சில வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

அரசமைப்பின் புதிய - 22 ஆவது திருத்தத்தின் கீழான - அரசமைப்புக் கவுன்ஸிலை உடனடியாகக் கூட்டி, புதிய தேர்தல் ஆணையத்தை அறிவித்து விட்டால், இருக்கும் தேர்தல் ஆணையம் உடனடியாக செயலிழந்து விடும். அதற்கு எதிராக இப்போது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் மனுக்களும் நெருக்கடிக்கு உள்ளாகும். அந்த மனுக்களைத் திரும்பப் பெற்று, எதிர்மனுதாரர்களாக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் தேர்தல் ஆணையத்தைக் குறிப்பிட வேண்டி இருக்கும்.

உயர்நீதிமன்றத்தில் ஏற்கனவே மனுக்கள்பரிசீலனைக்குஎடுக்கப்பட்டிருந்தால், அந்த எதிர்மனுதாரர்கள் பெயர் மாற்றம் கூட நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டியிருக்கும்.

இதனால் இவ்விடயத்தில் வழக்கு ஓரிரு தவணைக்கு தள்ளிப் போவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அத்தோடு புதிய தேர்தல் ஆணையம் நியமனம் பெற்று, அது கதிரையில் வந்து அமர முன்னர், தேர்தல் நடத்து என்று அதற்கு எதிராக வழக்கு தொடர்வது கூட சரியா என்ற வாதம் விடும்.

இந்தப் பொறிமுறைக்குள் நாடாளுமன்றத்தை கூட்டி, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான சட்டங்களை இடை நிறுத்தும் சட்டமூலம் ஒன்றை அரசு விரைந்து நிறைவேற்றுமானால், உத்தேச உள்ளூராட்சித் தேர்தல் இப்போதைக்கு நடத்தத் தேவையில்லாத நிலைமை ஏற்பட்டு விடும்.

ஏற்கனவே இன்றைய அமர்வுடன் நாடாளுமன்றம் இனி ஜனவரி 17 இல் ஒரு மாதம் கழித்துத்தான் கூடும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இலங்கை அரசு அந்தத் திட்டத்தை மாற்றி, இப்போது ஜனவரி 5ஆம் திகதியே நாடாளுமன்றத்தைக் கூட முடிவு செய்து நேற்று அறிவித்தும் விட்டது.

இது, உள்ளூராட்சித் தேர்தலை தற்போதைய தேர்தல் ஆணையமோ, இனி நியமிக்கப்படக்கூடிய புதிய தேர்தல் ஆணையமோ உத்தியோகபூர்வமாக அறிவித்து விட முன்னர், அந்தத் தேர்தல் முறைமையை மாற்றுவதற்காக - எல்லை மீள் நிர்ணய ஆணைக் குழுவின்ஏற்பாடுகளைநடைமுறைப்படுத்துவதற்காக - குறிப்பிட்ட சில காலத்துக்குத் தேர்தலை ஒத்தி வைக்கும் சட்ட மூலம் ஒன்றை அவசரச் சட்டமூலமாக நிறைவேற்றி கொள்வதற்கு வசதியாக, நாடாளுமன்ற அமைவைப் பயன்படுத்தும் ஏற்பாடாக இது கருதப்படுகின்றது.

தேர்தல் ஆணையம் தேர்தல் நடத்தும் தனது பிரதான கடப்பாட்டை விடுத்து, அரசின் எதிர்பார்ப்புக்கு தாளம் போடத் தொடங்கினால், தேர்தல் தள்ளிப் போடப்படுவதைத் தடுத்து நிறுத்துவது என்பது துர்லபம்தான்.

**- மின்னல் -**

## பேச்சுக்கு இந்தியா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் உள்ள தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி ஒரு மாத்திற்கு முன்பு பேச்சுவார்த்தை நடத்தப்போகிறார் என அறிவித்திருந்தார். இப்போது நாளை (இன்று) பேச்சுவார்த்தை நடக்கவிருப்பதாக அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஏற்கனவே 5 கட்சிகள் சம்பந்தன் ஐயா தலைமையில் கூடி சில தீர்மானங்களை எடுத்து ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தோம். இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் எங்களது கோரிக்கைகளை நாங்கள் முன் வைத்தோம்.

அதில் முதலாவது நில அபகரிப்பு நடந்து கொண்டிருக்கின்றது. அதனை உடனடியாக நிறுத்தி ஏற்கனவே எடுக்கப்பட்ட நிலங்களை மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் -

அதிகார பகிர்வு சம்பந்தமாக அரசமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி, மாகாண சபை தேர்தலை நடதத வேண்டும் என இரண்டாவதாகவும் -

உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்த வடக்கு - கிழக்கு பகுதியில் சமஷ்டி அடிப்படையில்அதிஉச்சஅதிகாரபகிர்வுடனான புதிய அரசமைப்பு கொண்டு வரப்படப்பட வேண்டும். இந்த ஒழுங்கு முறை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதை நாங்கள் விரும்புகின்றோம். இதன் அடிப்படையில் தான் பேசலாம் என நினைகின்றோம்.

இந்த விடயங்கள் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தான் தாம் பேச்சுவார்த்தைக்கு தொடர்ச்சியாக வர முடியும் என்ற விடயத்தையும் சொல்ல இருக்கின்றோம்.

அதைவிட சட்டத்தில் இருக்கின்ற மாகாணசபை முறைமை அதிகாரங்களுடன் பகிரப்படுகின்ற போது தான் எங்களுக்கு இப்பொழுது இருக்கின்ற பிரச்சினைகளைத் தக்க வைக்க முடியும் என்கின்ற அடிப்படையில் மாகாண சபைத் தேர்தலை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இருகின்ற சகல அதிகாரங்களுடனும் தேர்தலை நடத்தி, அதற்கான அதிகாரங்களபகிரப்பட்டு, நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த பேச்சுவார்த்தையில் அது முக்கிய இடம்பெறும்.

இன்று இனப்பிரச்சினை என்பது பல வருடங்களாக பேசப்படுகின்ற விடயம். மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேசி வருகின்றது. இறுதியாக நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பேசப்பட்ட போது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாக அது பிற்போடப்பட்டது. அல்லது தட்டிக் கழிக்கப்பட்டது. இப்பொழுதும் நாங்கள் கருதுகின்றோம். இந்த பேச்சுவார்த்தை என்பது ஐ.நா சபையினுடைய தீர்மானம், உலக நாடுகளினுடைய அழுத்தம் அல்லது பொருளாதார பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கான ஒரு செயற்பாட்டை காரணம் காட்டி அதன் அடையில் தான் இந்த பேச்சுவார்த்தை நடைபெறு கின்றதா என்ற சந்தேகம் இருக்கின்றது.

இருந்தாலும் நாங்கள் சென்று எங்களுடைய கருத்துக்களை சொல்லியாக வேண்டும் என்ற நிலைப்பாடு எங்களிடம் உள்ளது. சொல்லாமல் இருந்தால் அவர்கள் நாம் கேட்கும் விடயங்களை கொடுப்பதாக இருந்தோம், ஆனால் அவர்கள் (தமிழர்கள்) கலந்து கொள்ளவில்லை என்று சொல்லக் கூடிய நிலை உள்ளது. அதனால் எங்களது கருத்துக்களை சொல்ல வேண்டும்.

பிரதானமாக இனப்பிரச்சினை தீர்வில் இதுவரை காலமும் பேசி அரசாங்கத்துடன் நாங்கள் ஏமாற்றப்பட்டோம். இந்த பேச்சுவார்த்தை தொடர்ந்தும் தொடருமாக இருந்தால் இந்தியாவின் தலைமை மேற்பார்வையோடு அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளின் மேற்பார்வை இருக்க வேண்டும் என்பது நாங்கள் முன் வைக்கும் கோரிக்கையாக இருக்கும் என நம்புகின்றேன்.

இந்த வகையில் தான் எங்களது பேச்சுவார்த்தை ஒரு தீர்வுக்கு வருகின்ற வாய்ப்பை எட்டுமாக இருந்தால் மேற்பார்வை செய்கின்ற போது, இதில் கலந்து கொண்டு நாங்கள் பேசுகின்ற போது, அதனைப் பார்த்து எங்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தருவதற்கான வாய்ப்பை அந்த நாடுகள் உண்டு பண்ண வேண்டும். தற்போதுள்ள பொருளாதார பிரச்சினைகளை வைத்துக் கொண்டு எங்களது இந்த பேச்சுவார்த்தையின் ஊடாக தங்கது நலன்களைப் பேணுகின்ற வாய்ப்பை நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்தும் நடைபெறுவதாக இருந்தால் எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதன் மூலமே எங்களது 6 கட்சிகள் மற்றும் மலையக கட்சிகள், இதர முஸ்லிம்கட்சிகளையும்இணைத்துக்கொண்டு ஒற்றுமையாகதமிழ்மக்கள்இருக்கின்றார்கள் என்பதை தென்னிலங்கைக்கு காட்ட முடியும். அதனை நாம் ஒற்றுமையாக முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் தேசியகட கூட்டமைப்பில் 5 கட்சிகளுக்கு அறிவித்துள்ளார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னனிக்கும் அறிவித்துள்ளதாக அறிகின்றேன். அங்கு போகின்ற போது தான் யார் வருகிறார்கள் எனத் தெரியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித் தனியாக போட்டியிடுவது குறித்து ஏற்கனவே நாடாளுமன்றக் கூட்டத்திலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராய்ந்தோம். ஏனெனில் கடந்த முறை போன்ற தேர்தல் முறை போல் வருமாக இருந்தால், அது தொடர்பாக யோசிக்கலாம் என நினைத்தோம். மக்கள் எங்களுக்கு வாக்களித்தார்கள். ஆனால் தோற்றவர்கள், அங்கத்துவம் இல்லாதவர்கள் சபைகளில் ஆட்சியைப்பிடிக்கும்நிலைஇருந்தது. அதை தடுக்க வேண்டுமாக இருந்தால் தனித்து போட்டியிடலாம் என கலந்துரை யாடினோம். அது முடிவாக எடுக்கப்படவில்லை.

இந்திய பிரதமர் நரேந்திரமோடியை ஐந்து கட்சிகள் ஒப்பமிட்டு பிரதமருக்குக் கடிதம் அனுப்பினோம். மாகாணசபை முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதனைத் தொடர்ந்து நாங்கள் சந்திக்க வேண்டும் எனவும் கோரினோம். இந்திய பிரதமரை சந்திப்பதற்கு நாங்கள் காத்திருகின்றோம். ஆனால் அதற்கான அழைப்பு வரவில்லை. ஆனால் விரைவில் வரும் என நம்புகின்றேன். - எனத் தெரிவித்தார்.






காலைக்கதிர்
Kalaikkathir

# பிரச்சினையை தீர்ப்பதாகக் காட்டி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே பேச்சின் நோக்கம் என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.

## சர்வகட்சி கூட்டத்துக்கான அழைப்பு தொடர்பில்



இந்த இனப்பிரச்சினையை தீர்த்து புலம்பெயர் தமிழர்களது முதலீட்டையும் நிரப்பி, ஒட்டுமொத்தமாக இந்த இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவற்கு ஒரு மிகப்பெரிய தேவை ஒன்று இருப்பதால் நாங்கள் எங்களுடைய முக்கியத்துவத்தை இந்த சந்தர்ப்பத்தில் விளங்கிக் கொண்டு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் செயற்பட வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற குறுந்தகவல் ஒன்றில், இன்று (செவ்வாய்க் கிழமை) சர்வகட்சி தலைவர்களின் கூட்டத்துக்கான அழைப்பு ஒன்று கிடைத்ததாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இதுவரை எழுத்து மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அறிவிக்கப்படவில்லை. இதற்கு முன்பு பல தடவைகள் எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கின்றோம். இந்தப் பேச்சு தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக அந்த அறிவித்தலில் இருக்கவில்லை.

ஜனாதிபதி பல தடவைகள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருந்தார். இது தவிர அது ஆக்கபூர்வமாக இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுவதற்காக மட்டும் நடைபெறும் பேச்சாக இதுவரை அறிவிக்கவில்லை.

எத்தனையோ பேச்சுகள் நடைபெற்று தோல்வியடைந்தன. நடைபெற்ற அனைத்து பேச்சிலும் தமிழ் மக்களே ஏமாற்றமடைந்திருக்கின்றார்கள். தொடர்ந்தும் நாங்கள் இந்தப் பேச்சில் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை. ஏன் என்றால் இன்றைக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் சாதாரண சந்தர்ப்பம் இல்லை.

இந்த இனப்பிரச்சினையைத் தீர்த்து புலம்பெயர் தமிழர்களது முதலீட்டையும் நிரப்பி, ஒட்டுமொத்தமாக இந்த இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஒரு மிகப்பெரிய தேவை ஒன்று இருப்பதால் நாங்கள் எங்களுடைய முக்கியத்துவத்தை இந்த சந்தர்ப்பத்தில் விளங்கிக் கொண்டு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் செயற்பட வேண்டும்.

இந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, விக்னேஸ்வரன் போன்ற தரப்புக்கள் நாங்கள் கூறிய அணுகுமுறையை கடைப்பிடித்து இருந்தால் இந்த அரசாங்கத்துக்கு உண்மைத்தன்மையிலே சிங்கள மக்களிடம் பேச முடியாத நிலை உருவாகும்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர ஏனைய அனைத்து தரப்புக்களும் நிபந்தனை இல்லாமல் சமஷ்டி சமஷ்டி என்று மக்களுக்கு ஒரு முகத்தை காட்டிக் கொண்டு ஒரு நிபந்தனையும் போடாமல் விடப்போகின்றார். அந்த பேச்சில் கலந்து கொண்டு அவர்களுக்கு தேவையான அங்கீகாரத்தை கொடுத்து விடுவதாகத் தான் இருக்கும்.

ஆகவே, மக்கள் அனைத்தையும் விளங்கிக் கொண்டு எங்களுடைய அணுகுமுறை மட்டும் தான் இந்த அரசாங்கத்தையும் சிங்கள தேசத்தையும் இந்த நேரத்திலாவது, தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக ஓர் ஆக்கபூர்வமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ளக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கும் என்ற விடயத்தையும் கூறி, இதை நாங்கள் நழுவ விட்டால், தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை என்ற எல்லையை தாண்டி எட்டமுடியாத இடத்திற்கு கொண்டு செல்வதற்கான ஆபத்துக்கள் இருக்கின்றன. அதற்கு முழு பொறுப்புக்கள் இந்த பேச்சில் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் நடந்து கொண்ட தரப்புக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கின் பொருளாதாரத்துக்கான சர்வதேச வாயில் மீண்டும் திறப்பு!

## அமைச்சர் டக்ளஸ் மகிழ்ச்சி

தொடர்ச்சியான பல்வேறு முயற்சிகளின் பலனாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பலாலிக்கான விமான சேவையை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்ட பலாலிக்கான விமான சேவை இன்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளமை, வடக்கு மாகாண மக்களுக்கு மாத்திரமன்றி கிழக்கு மற்றும் அநுராதபுரம் பொலன்னறுவை போன்ற வட மத்திய மாகாணங்களும் நன்மை பயக்கவுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், அடிப்படையான வசதிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டளவு சேவைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டம் கட்டமாக விஸ்தரிப்பதற்கு தேவையான நகர்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இதுதொடர்பாக, இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதுடன் அமைச்சரவையிலும் பிரஸ்தாபிக்கவுள்ளேன்.

இந்நிலையில், மக்கள் சரியான முறையில் இதனைப் பயன்படுத்துவார்களாயின், எதிர்காலத்தில் இந்தியாவிற்கான சேவைகள் விரிவுபடுத்தப்படும் என்பதுடன் ஏனைய நாடுகளில் இருந்தும் சேவையை முன்னெடுப்பதற்கும் விமான நிறுவனங்கள் முன்வரும்.



இதன்மூலம், எமது பிரதேசத்தின் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைவதுடன், ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகளுக்கான நேரடி வாசலாகவும் பலாலி விமான நிலையம் செயற்படும். இது எமது மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் போன்றவற்றுக்கு இடையிலான சரக்கு படகு சேவையை ஆரம்பிக்கும் தன்னுடைய முயற்சிகளும் விரைவில் சாத்தியமாகும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2 ஆயிரம் கோடி ரூபா நகைகள் அடைவில்!

## நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக

கணக்கெடுப்பொன்றின்படி, பொருளாதார நெருக்கடி காரணமாக 2 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியுடைய தங்க நகைகள் நிதி நிறுவனங்களில் அடகு வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இவ்வாண்டின் முதல் 10 மாதங்களில் 1,930 அதிக பெறுமதியுடைய தங்க ஆபரணங்கள் அடகு வைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

உரிமம் பெற்ற 13 வணிக வங்கிகள் மற்றும் 10 அடகு நிலையங்களில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தங்கத்தை அடகு வைத்தவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் அடகு நிலையங்களில் அதிக பணம் கிடைக்கப்பெறுவதால், அந்த சேவையை பெறுவதற்கு தற்போது நுகர்வோர் அடகு நிலையங்களை அதிகளவில் நாடுகின்றனர் எனவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விழுந்தாலும் விதையாக விழுவோம் விருட்சமாக நாம் மீண்டெழுவோம்!


## ஜீவன் தொண்டமான் கூறுகிறார்

'தோல்வியே சிறந்த ஆசான். அதிலிருந்து பாடங்களை கற்றுக்கொண்டு, முன்னேறுவதற்கான வழிகளை நாம் அடையாளம் காண வேண்டும். எனவே, தோல்விகளைக் கண்டு துவண்டுவிட வேண்டாம். அடிபட்டதும், அடிபணிந்து வாழ்ந்ததும் போதும். இனி விழுந்தாலும் விதையாக விழுவோம். விருட்சமாக மீண்டெழுவோம்.' என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை ஸ்டோனிகிளிப் தமிழ் மகா வித்தியாலயம், திம்புள்ள தமிழ் மகா வித்தியாலயம், மவுண்ட்வேர்னன் தமிழ் மகா வித்தியாலயம், போகாவத்தை சிங்கள வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து புலமைப் பரிசிலில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும், க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும், போகாவத்தை மற்றும் ஸ்டோனிகிளிப் வட்டார கரப்பந்தாட்டப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வும், ஸ்டோனிகிளிப் வட்டார கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

கொட்டகலை ஸ்டோனிகிளிப் ஜொலி போய்ஸ் விளையாட்டு கழகத்தின் தலைவரும், கொட்டகலை பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.லெட்சுமண் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், சிறப்பு அதிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதி செயலாளரும், தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன், கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாத், உப தலைவர் ஐ.பாலசுப்பிரமணியம், இ.தொ.காவின் இளைஞர் அணி பொது செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், கழக உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தோட்ட அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

எம்மில் சிலர் தோல்வியைக் கண்டு அஞ்சுகின்றனர். துவண்டுபோய் விடுகின்றனர். தோல்வியைக்கூட எமக்கு சாதகமான விடயமாக மாற்றிக்கொள்ள வேண்டும். எமது பலம் எது, பலவீனம் எது என்பதை அதன் ஊடாக அறியலாம். எங்கு தவறு இடம்பெற்றுள்ளது என்பதையும் உணரலாம். தோல்வி என்பது சிறந்த ஆசான். பல பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம்.

தோல்வியுற்றால் எம்மை ஒதுக்கி கண்டு கொள்ளாத இதே சமூகம்தான், தோல்வியில் இருந்து மீண்டுவிட்டால் வாழ்த்தி வரவேற்கும். மாலைபோட்டு மரியாதை செலுத்தும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவேதான் தோல்வியைக் கண்டு அஞ்ச வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன்.

நாம் அடிமட்டத்தில் இருக்கின்றோம். இனியும் பின்நோக்கி செல்ல இடமில்லை. எனவே, நாம் முன்னேற வேண்டும். அதற்காக மட்டுமே முயற்சிக்க வேண்டும்.

போதை பாவித்தால் தூக்கம் வராது, நன்றாக படிக்கலாம் என ஏமாற்றி மாணவர்களை, சிலர் போதைக்கு அடிமையாக்குகின்றனர். போதை என்பது ஆபத்தானது. உயிரை பறிக்கக்கூடியது. எனவே, எவரும் அந்த அபாயத்துக்குள் விழுந்துவிடக்கூடாது.

30 வருடங்கள் எமக்கு பிரஜா உரிமை இருக்கவில்லை. பின்நிலைப்படுத்தப்பட்டுள்ளோம். இந்நிலையில் போதைப் பொறிக்குள்ளும் நாம் சிக்கிவிடக்கூடாது. இது விடயத்தில் பெற்றோர் விழிப்பாக இருக்க வேண்டும். இதற்கு மேலும் அடிபணிந்தோ, அடிவாங்கியோ வாழ முடியாது. முன்னேற வேண்டும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாறாப் பரவணிப் பண்பியல்பு

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அமைதி முயற்சி விடயத்தில் காலம் காலமாக – வரலாற்றுப் பாரம்பரியமாக – இடம் பெறும் அம்சம் ஒன்றை விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் சுட்டிக்காட்டி இருந்தார்.

"பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாடு காணும் வழிமுறைக்கு சிங்கள அரசியல் தலைவர்களின் இன வெறிப் போக்குடைய அரசியல் அணுகுமுறை இடம் அளிக்கவில்லை. சிங்கள தேசத்தின் இனவாத அரசியல் அணுகுமுறையில் மாறி மாறி நிகழும் ஒரு வரலாற்றுப் பாங்காக, மாற்ற முடியாத ஒரு நடைமுறையாக, ஓர் உண்மையைக் கண்டு கொள்ளலாம். அதாவது ஆட்சி பீடம் ஏறும் கட்சி, தமிழர் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முற்படும் போது, எதிர்க்கட்சியாக விளங்கும் கட்சி அம்முயற்சியை முறியடிக்கும் வகையில், தமிழ் விரோத உணர்வைத் தூண்டிவிடும். இதன்படி சிங்களத் தேசப்பற்றாளர்களாகத் தம்மை இனம் காட்டி, எதிராளிக் கட்சிக்காரரைக் காட்டிலும் தாம் கெட்டிக்காரர் என உயர்த்தி காட்டி, அரசியல் லாபம் தேடும் ஒரு கீழ்த்தரமான அரசியல் நடைமுறையை சிங்கள அரசியல் கட்சிகள் மாறி மாறி கடைப்பிடிப்பது ஒரு வரலாற்று நியதியாகிவிட்டது" – என்றார் அன்ரன் பாலசிங்கம்.

இப்போதும் கூட, இந்த மாறாப் பண்பியல்பு உறுதி செய்யப்படுகின்றது என்பதுதான் நமது துரதிஷ்டம்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஆராய்வதற்கான அழைப்பை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்துள்ளார். சந்திப்பு இன்று மாலை நடைபெறுகின்றது.

அதற்கிடையில் –

"எந்த அதிகார பகிர்வோ, பரவலாக்கலோ ஒற்றையாட்சி முறைக்குள்தான் நடக்க வேண்டும். அதை மீறக் கூடாது" – என்று தமது தரப்பின் பரவணி நிலைப்பாட்டை அறிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

தமிழர் தரப்பு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு குறித்துப் பிரஸ்தாபிக்கின்றது.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவரோ ஒற்றையாட்சிக்கு வெளியே வர அனுமதிக்கப்பட மாட்டாது என்று முழங்குகின்றமை மூலம் தமது பேரினவாத முகத்தைக் காட்டத் தொடங்கி விட்டார்.

இன்று மாலை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அதனைத்தான் அவர் வலியுறுத்துவார் என்பது திண்ணம். அவருக்காக கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஒன்று திரண்டு வாக்களித்த தமிழ் மக்கள் அந்தப் பாவத்திற்காக இத்தகைய எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

# கல்விப் புரட்சிமூலமே சமூக மாற்றம் ஏற்படுத்தலாம் அன்றும் இன்றும் என்றும் காங்கிரஸ் அதில் உறுதி!

## எம்.ராமேஷ்வரன் தெரிவிப்பு




கல்விப் புரட்சிமூலமே சமூகமாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதில் அன்றும் இன்றும் என்றும் காங்கிரஸ் உறுதியாக நிற்கின்றது. அதனால் தான் கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன், அபிவிருத்திகளின் போது பாடசாலைக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

கொட்டகலை ஸ்டோனிகிளிப் தமிழ் மகா வித்தியாலயம், திம்புள்ள தமிழ் மகா வித்தியாலயம், மவுண்ட்வேர்னன் தமிழ் மகா வித்தியாலயம், போகாவத்தை சிங்கள வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து புலமைப் பரிசிலில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும், க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும், போகாவத்தை மற்றும் ஸ்டோனிகிளிப் வட்டார கரப்பந்தாட்ட போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வும், ஸ்டோனிகிளிப் வட்டார கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வும் கொட்டகலை ஸ்டோனிகிளிப் தோட்ட மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

செல்வத்துள் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும். அந்த செல்வத்தை எமது சமூகத்துக்கு அள்ளி கொடுத்து, அதன்மூலம் முன்னேற்றத்தை அடையவே காங்கிரஸ் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது. கல்விக்காக நாம் செய்த சேவைகள் ஏராளம். எமது பெருந் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலமாக இருக்கட்டும், தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலமாக இருக்கட்டும், தற்போதைய எமது செயலாளர் ஜீவன் தொண்டமானின் காலமாக இருக்கட்டும் கல்விக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது. கல்வியால் எமது சமூகம் உயர வேண்டும் என்பதற்காகவே அன்று பெருந்தலைவரால் பாடசாலைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

மற்றைய சமூகம்போல் நாம் முன்னேற வேண்டுமானால் – தோட்ட தொழிலில் இருந்து வெளியில் வரவேண்டுமானால் – எமக்கு உள்ள ஒரே ஆயுதம் கல்வியாகும். எமது மலையக சமூகம் தற்போது முன்னேறி வருகின்றது. எல்லா இடங்களிலும் எம்மவர்கள் சிறந்த தொழிலில் உள்ளனர். இம்முறை பாடசாலைகளின் பெறுபேறும் சிறப்பாக உள்ளது. என்னதான் செல்வம் இருந்தாலும், கல்வி இல்லாவிட்டால், மதிப்பில்லை. எனவே, கல்விச் செல்வத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான வசதிகளையும், வளங்களையும் பெற்றுக்கொடுக்க நாம் தயார்.

கல்வி தொடர்பாகப் பெற்றோரும் கவனம் செலுத்த வேண்டும். கஷ்டம் இருந்தாலும் பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தக் கூடாது. – என்றார்.

# ஓட்டோவில் கஜ முத்துக்களை கடத்திய 3 பேர் கைதாகினர்!





அம்பாறை பிபிலையில் இருந்து மகா ஓயாவிற்கு 5 கஜமுத்துக்களை ஓட்டோ ஒன்றில் கடத்தி சென்ற 3 பேரை கைது செய்துள்ளதாக மகாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து சம்பவதினமான நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) மாலை மகாஓயா இலங்கை வங்கிக்கு அருகில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, பிபிலையில் இருந்து கஜமுத்துக்களை வியாபாரத்துக்காக மகாஓயாவிற்கு கடத்தி சென்ற ஓட்டோவைக் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் இடைமறித்து சோதனையிட்டபோது அதில் 5 கஜமுத்துக்களுடன் 3 பேரை கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் பிபிலையைச் சேர்ந்த 53, 34 மற்றும் 36 வயதுடையவர்களாவர். மீட்கப்பட்ட கஜமுத்துக்கள் மற்றும் கடத் தலுக்கு பயன்படுத்திய ஓட்டோ ஆகியன மகாஓயா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பெண் ஒருவரைத் தாக்கினார்கள் சந்தேகத்தில் இரு பெண்கள் கைது!

## கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவில், கார் ஒன்று ஓட்டோவின் பின்புறத்தில் மோதிய சம்பவம் தொடர்பில் காரில் பயணித்த பெண் ஒருவரை இரு பெண்கள் தாக்கிய சம்பவம் தொடர்பில் இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் வெள்ளவத்தை மற்றும் எல்லகலை பிரதேசங்களில் வசிக்கும் தனியார் நிறுவனமொன்றின் 42 மற்றும் 64 வயதுடைய பெண் ஊழியர்களாவர்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று (திங்கட்கிழமை) கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் தப்பியோடிய சாரதியைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

இந்த விபத்தில் 55 வயதுடைய ஓட்டோச் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# போதைப்பொருள்களுக்கு எதிராக யாழில் போராட்டம்

போதைப்பொருளுக்கு எதிராக தீவக இளைஞர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டு பிரிவாக, யாழ். தீவக மறைக்கோட்டத்துக் குட்டபட்ட பகுதிகளை சேர்ந்த இளைஞர்கள் வேலணை பிரதேசத்தில் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

இந்தப் போராட்டத்தில் மண்டைதீவு, சாட்டி, நாரந்தனை, கரம்பொன், புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் உள்ள இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

ஒரு பிரிவினர் மண்கும்பான் சந்தியிலிருந்தும், இன்னொரு பிரிவினர் வங்கலாவடி சந்தியிலிருந்தும் போராட்டத்தை ஆரம்பித்து சாட்டி திருத்தலத்தை நோக்கி பதாதைகளை ஏந்தியவாறு பவனியாக வந்து போதைப் பொருளுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.







தீவக மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்பணி நரேஸ் அடிகளார் வழிநடத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார், தீவக மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி டேவிட் அடிகளார், அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொலிஸார், உத்தியோகத்தர்கள் நலன் விரும்பிகள், இளையோர் மற்றும் பொதுமக்கள் என பலதரப்பட்டோர் கலந்துகொண்டனர்.

# ராஜபக்ஷர்கள் ஆட்சிக்கு வரும்வரை சு.கவில் எவரும் திருடர்கள் அல்லர்!



## போட்டுத் தாக்குகிறார் சந்திரிகா

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாதொழித்து பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு தேவைக்கு ஏற்ப அதனை மீண்டும் உருவாக்குவது ராஜபக்ஷக்களின் கனவுகளில் ஒன்றாகக் காணப்பட்டது.

அவர்கள் ஆட்சிக்கு வரும் வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எவரும் திருடர்கள் அல்லர். ஆட்சியில் இருந்தவர்கள் திருடியமையே நாடு இன்று வங்குரோத்து அடைய மிக முக்கிய காரணம் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

எதிர்காலத்துக்கான மாற்றம் என்ற தொனிப்பொருளில் குருநாகல் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

இன்று எமது நாட்டில் சுமார் 33 வீதமானவர்களுக்கு தொழில் இல்லை. பொருளாதாரம் முழுமையாகச் சரிவடைந்துள்ளது. முதற் தடவையாக இலங்கை வங்குரோத்து அடைந்து விட்டதாக சர்வதேசத்துக்கு அறிவித்தது. பயணம் செய்வதற்கு எரிபொருள் இல்லை. உண்பதற்கு உணவில்லை. மின்சாரம் இல்லை. கல்வி செயற்பாடுகள் பூச்சிய மட்டத்துக்கு சென்று விட்டன.

இந்த நாட்டில் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் முற்றிலும் பிழையானவை. ஆட்சியில் இருந்தவர்கள் திருடியமையே நாடு இன்று வங்குரோத்து அடையக் காரணமாகும். இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்டவற்றில் மோசடிகள் இடம் பெற்றன.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் வரை ஆட்சியில் உள்ளவர்கள் அனைவரும் மோசடியில் ஈடுபட்டனர். அன்று நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி செயல் திட்டத்தை நானே ஆரம்பித்தேன்.

ராஜபக்ஷ அதில் 1,500 கோடி ரூபா வரையில் கையாடல் செய்தார். பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற திருட்டு ராஜபக்ஷவின் மனைவி செய்த மிகப்பெரிய மோசடியாகும்.

இவ்வாறான திருட்டுக்கள் காரணமாக இன்று எந்த நாடும் வங்குரோத்து அடையாத அளவிற்கு இலங்கை வங்குரோத்து அடைந்துள்ளது.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாதொழித்து பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு தேவைக்கு ஏற்ப அதனை மீண்டும் உருவாக்குவது ராஜபக்ஷக்களின் கனவுகளில் ஒன்றாகக் காணப்பட்டது.

அவர்கள் ஆட்சிக்கு வரும் வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எவரும் திருடவில்லை. நாட்டில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. அதில் பெரும்பான்மை பலத்துடன் காணப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்றத்தில் 6 கட்சிகளாக பிரிந்து செயற்படுகிறது. அதில் பெரும்பாலானவர்களை ராஜபக்ஷ அழைத்துச் சென்று விட்டார்.

எதிர்காலத்தில் நாட்டை மீட்டெடுக்க இளைஞர்களுடைய பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மக்கள் எழுச்சி போராட்டங்கள் இதனை நன்கு உணர்த்தின.

கடந்த 74 வருடங்களாக நாட்டு மக்கள் ஆட்சியாளர்களை பதவியில் அமர்த்தினாலும் அவர்கள் மக்களை ஏமாற்றி ஊழல் மற்றும் மோசடி, கொலை, கொள்ளையில் ஈடுபட்டு நாட்டையே முற்றாக இல்லாது செய்துள்ளனர். இந்த நிலையில் நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய பொருத்தமான தலைவர் ஒருவர் இல்லாத நிலையே இன்று காணப்படுகிறது.

நாட்டைக் கட்டியெழுப்ப புதியதொரு அரசியல் கலாசாரம் மற்றும் மாற்றமொன்று தேவைப்படுகிறது. மேலும் புதியதொரு தலைமைத்துவம் தேவைப்படுகிறது. புதிய திட்டங்கள், கொள்கைகளைக் கொண்ட தலைவர் ஒருவர் தேவைப்படுகிறார். அரசமைப்பில் புதிய மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது. – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டும் என்பதில் மக்கள் காங்கிரஸ் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கும்!


ரிஷாத் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகளும் அதற்கு பின்புலத்தில் நின்றவர்களும் கண்டறியப்பட வேண்டும் என்பதிலும், முஸ்லிம்களின் ஜனஸாக்களை அநியாயமாக எரித்தவர்கள் கண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும், பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுதியுடன் இருப்பதாக கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

முஸ்லிம்களை மிக மோசமாக பாதித்த இந்த விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்காத எவருக்கும் எமது கட்சி ஒத்துழைப்பு வழங்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பேராளர் மாநாடு, கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் தெஹிவளை, ரோஸ்வூட் செலோனில் இடம்பெற்றபோது, விசேட அழைப்பின் பெயரில் அங்கு வருகை தந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், தமிழக சட்டமன்ற உறுப்பினரும் மனித நேய மக்கள் கட்சியின் தலைவருமான பேராசிரியர் ஜவாஹிருல்லா உட்பட தமிழக முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டதுடன் விஷேட உரைகளையும் நிகழ்த்தினர்.

இதன்போது, தொடர்ந்து உரையாற்றிய மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் மேலும் கூறியவை வருமாறு –

பல சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் மத்தியிலேயே கட்சியை வழிநடத்தி வருகின்றோம். சிறுபான்மைக் கட்சிகள் தேவையா? இல்லையா? என்ற வாதப்பிரதிவாதங்கள் ஒரு காலத்தில் இடம்பெற்றன. பெரும்பான்மைக் கட்சிகளில் உள்ள சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள், தமது இனத்துக்கு அநீதி இழைக்கப்படும்போது தட்டிக்கேட்க முடியாதவர்களாகவும் பேசாமடந்தைகளாகவும் இருந்த வேளை, தமது சமூகத்தின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதற்காகவே முஸ்லிம் கட்சிகள் தோற்றம் பெற்றன.

அந்தவகையில், காலவோட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் உருவாகி, மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்றது. எமது கட்சிக் கொள்கையில் பற்றுக்கொண்டவர்கள் இதில் சங்கமமாகினர். முஸ்லிம்கள் மாத்திரமின்றி இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் என எமது கட்சியில் அங்கத்துவம் பெற்றனர். பன்முகத்தன்மையும் இனவாதமற்ற போக்கும் சகல இனத்தையும் சமமாக மதிக்கும், கருதும் பாங்கும் இருந்ததால்தான் மக்களின் அங்கீகாரம் கிடைத்தது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் வடக்கு, கிழக்கில் நாங்கள் பல சபைகளை கைப்பற்றினோம். அதுவும் நூறு சதவீதம் தமிழர்கள் வாழும், யுத்தத்தால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச சபையை நாம் கைப்பற்றினோம். மன்னாரில் 70 சதவீதம் தமிழர்கள் வாழும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் 11 வட்டாரங்களையும் கைப்பற்றி ஆட்சியை பிடித்தோம். கிறிஸ்தவர் ஒருவரை தவிசாளர் ஆக்கினோம். அவர் மரணித்ததன் பின்னர் இந்து சகோதரர் ஒருவரை தவிசாளர் ஆக்கினோம். அதேபோன்று, வட மாகாண சபையில், தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் வவுனியாவில் இருந்து பௌத்தர் ஒருவரை எமது கட்சியின் சார்பில் மாகாண சபைக்கு அனுப்பினோம். சமத்துவம், சகோதரத்துவம், இன சௌஜன்யம் ஆகியவற்றின்பால் எமது கட்சி பயணிப்பதால்தான், அனைத்து இன மக்களையும் அரவணைத்து செல்ல முடிகின்றது. அனைத்து சமூகத்தவரையும் அதிகாரத்தில் அமர்த்த முடிகின்றது.


எந்தவிதமான பேதமும் இன்றி நாம் பயணிப்பதில் காழ்ப்புணர்வு கொண்ட அரசியல் சக்திகள் எம்மை வீழ்த்த சதி செய்தன. இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி, தலைமையையும் கட்சியையும் சிதைக்கதலைப்பட்டன. தலைமை மீது போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி சிறையில் அடைத்தனர். இல்லாத பொல்லாததை எல்லாம் ஊடகங்கள் வாயிலாகவும் மேடைகள் மூலமும் விஷமாகக் கக்கி, தலைமையையும் கட்சியையும் சிதைக்க முயன்றனர். இனவாதத்தை மூலதனமாக்கிஆட்சியை பிடித்தனர். ஆனால், எந்தவொரு குற்றச்சாட்டுக்களும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை. அத்துடன், சட்டத்துறை நேர்மையாக செயற்பட்டதால் பல குற்றச்சாட்டுக்களிலிருந்து தலைமை நிரபராதி என்று நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

அது மாத்திரமன்றி, கட்சிப் போராளிகளின் தியாகத்தாலும் நமது அர்ப்பணிப்புக்களாலும், மக்கள் காங்கிரஸ் மூலம் பதவிக்கு வந்தவர்கள், கட்சிக் கொள்கைக்கு மாறாக செயற்பட்டு, துரோகம் இழைத்தனர். அவர்களும் எமது கட்சியை அழிக்க கங்கணங்கட்டி வருகின்றனர். எனினும், மக்கள் ஆதரவு பெற்ற இந்தக் கட்சி தொடர்ந்தும் நேரிய வழியில், முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் என்பதை உறுதியாகக் கூறுகின்றோம்.

நாங்கள் கடந்த காலங்களில் பல்வேறு சமூக பிரச்சினைகளுக்காக முன்நின்று உழைத்தவர்கள். பிரச்சினைகளை கண்டு ஓடி ஒழிந்தவர்கள் அல்லர். எதிர்வரும் காலங்களிலும் இந்தக் கட்சி மக்கள் நலனுக்காகவே காரியமாற்றும்' என்று தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் 13 ஆம் திகதி இனப்பிரச்சினை தொடர்பில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனவும், தமிழர்களும் முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, சந்தோசமாக வாழக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகளை மக்கள் காங்கிரஸ் முன்வைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்
## பெருவிருந்து மண்டபம்
## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308


No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# அடுத்த விமானத் தாங்கிக் கப்பலை தயாரிக்கத் தொடங்கியது இந்தியா



## இந்த இரண்டாவது கப்பல் 65 ஆயிரம் தொன் எடையில்!



உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ். விக்ராந்த் செயற்படத் தொடங்கியமையை அடுத்து, இந்தியா தனது இரண்டாவது விமானத் தாங்கிக் கப்பலை உருவாக்கும் பணியைத் தொடங்கியுள்ளது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

'அஜெண்டா ஆஜ் தக்' திட்டத்தில் உரையாற்றிய ராஜ்நாத் சிங், சமீபத்தில் ஐ.என்.எஸ். விக்ராந்தை இயக்கி வைத்த போது விமானம் தாங்கிக் கப்பலை உருவாக்கிய உலகின் ஏழாவது நாடாக இந்தியா ஆனது என்றார்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது நாட்டில் ஒரு ஊசி கூட உற்பத்தி செய்யப்படவில்லை. 2022 இல், நாங்கள் ஐ.என்.எஸ். விக்ராந்த் போன்ற மிகப்பெரிய விமானம் தாங்கிக் கப்பலை உருவாக்குகிறோம், என்று பாதுகாப்பு அமைச்சர் கூறினார். சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா இப்படிச் செய்ய வல்லது என்று யாரும் நம்பியிருக்க மாட்டார்கள் என்றார் அவர்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பிறகு, விமானம் தாங்கி கப்பலை உருவாக்கும் ஏழாவது நாடு இந்தியா என்று சிங் கூறினார்.

ஹமரே தூஸ்ரே விமானம் தாங்கி கப்பலான கா பி காம் பிரம்ப் ஹோ கயா ஹை (எங்கள் இரண்டாவது விமானம் தாங்கி கப்பலின் பணி தொடங்கியுள்ளது) என்று அமைச்சர் கூறினார்.

ஐ.என்.எஸ். விக்ராந்த் விமானம் தாங்கி போர்க்கப்பல் தயாரிப்பில் 73 முதல் 74 சதவீத உள்நாட்டுமயமாக்கலை எட்டியுள்ளது என்பதை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

தற்போது, இந்தியா இரண்டு விமானம் தாங்கி போர்க் கப்பல்களை இயக்குகிறது – ரஷ்யாவால் கட்டப்பட்ட ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா மற்றும் உள்நாட்டிலேயே கட்டப்பட்ட ஐ.என்.எஸ். விக்ராந்த் – 40,000 தொன் எடை கொண்ட கப்பலானது.

கடந்த வாரம், கடற்படைத் தலைவர் அட்மிரல் ஆர் ஹரி குமார், நாட்டிற்குள் இருக்கும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி ஐ.என்.எஸ். விக்ராந்திற்கு மீண்டும் ஆர்டர் கொடுப்பது குறித்து கடற்படை பரிசீலித்து வருவதாகக் கூறியிருந்தார்.

65,000 தொன் எடையுள்ள ஒரு கனமான கப்பலான உள்நாட்டு விமானம் தாங்கி கப்பலை உருவாக்குவது குறித்து கடற்படை இன்னும் உறுதியாகவில்லை என்றும் குமார் அச்சமயம் குறிப்பிட்டிருந்தார்.

ஆத்மநிர்பார் பாரத் திட்டத்தின் கீழ், பிரதமர் நரேந்திர மோடி, 'மேக் இன் இந்தியா' மற்றும் 'மேக் ஃபார் தி வேர்ல்ட்' என்று வணிகங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் என ராஜ்நாத் சிங் கூறினார்.

'டாடா – ஏர்பஸ் சி – 295' போக்குவரத்து விமானங்களைத் தயாரிப்பதற்கு இந்தியாவில் அடித்தளம் அமைத்துள்ளது. இது மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் என்றார் அவர்.

இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி இந்த ஆண்டு ஏற்கனவே 14,000 கோடி இந்திய ரூபாவைத் தொட்டுள்ளது என்றும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 19,000 கோடி ரூபாவை அது எட்டும் என்றும் சிங் மேலும் கூறினார்.

2024 – 25 ஆம் ஆண்டிற்குள் பாதுகாப்பு ஏற்றுமதியில் இந்தியா 25,000 கோடி ரூபாவை இலக்கு நிர்ணயித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

**(மூலம்: என்.டி.ரி.வி.)**



## உலகத் தொழிநுட்ப சந்தையில் சீனாவை முந்தியது இந்திய நாடு

பீஜிங், டிச.12

சீனாவை சேர்ந்த தொழிநுட்ப வல்லுநர் மைக் லியு. இந்தியா மற்றும் சீனாவின் பல முன்னணி தொழிநுட்ப நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவமுடைய இவர், 'இந்திய தகவல் தொழில்நுட்பத்தின் எழுச்சி' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இவர் உலகளாவிய தொழிநுட்ப சந்தையில், சீனாவை விட இந்தியா முன்னிலையில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

உலகச் சந்தைகளில் இந்திய தொழிநுட்ப நிறுவனங்கள் ஆட்சி செய்வதாக கூறும் அவர், சீனாவின் தொழில்நுட்ப வருமானம் பெரும்பாலும் உள்நாட்டில் இருந்தே கிடைப்பதாகத் தெரிவிக்கிறார்.

அதாவது, சீனாவின் தகவல் தொழில்நுட்ப வருவாயில் 95 சதவீதத்திற்கும் அதிகமானவை உள்நாட்டு சீன சந்தையில் இருந்து வருகிறது, என்கிறார் மைக் லியு. சர்வதேச சந்தைகளில் கால் பதிக்க சீன தொழிநுட்ப நிறுவனங்கள் நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 6 நபர்கள் பயணிக்கக்கூடிய பட்டரி ஸ்கூட்டர்



முழுமையாக சார்ஜ் செய்தால் 6 பேர் 150 கி.மீ. வரை பயணிக்கக் கூடிய பட்டரி ஸ்கூட்டர் இது. அது மட்டுமல்ல இந்த பட்டரி முழுமையாக சார்ஜ் ஏற 8 – 10 ரூபா (இந்தியப் பணத்தில்) மட்டுமே செலவாகும்.

மகேந்திரா நிறுவனத் தலைவர் ஆனந்த் மகேந்திரா அவ்வப்போது சில வித்தியாசமான வீடியோக்களை சமூகவலைத்தளங்களில் பகிர்வார். குறிப்பாக வாகனம் குறித்த ஏதாவது வித்தியாசமான வீடியோக்கள் வந்தால் அதை நிச்சயம் வெளியிடுவார். இவர் சமீபத்தில் ஒரு வீடியோ ஒன்றைப் பகிர்ந்திருந்தார். இந்த வீடியோ தான் தற்போது சமூகவலைத்தளங்களில் டிரெண்டிங் காக மாறியுள்ளது. 2 சக்கரங்கள் மட்டுமே கொண்ட இந்த ஸ்கூட்டரில் ஒருவர் பின் ஒருவராக மொத்தம் 6 பேர் பயணம் செய்கின்றனர். முதலில் இதை ஒரு இளைஞர் மட்டும் ஓட்டுகிறார். பின்னால் மீதி 5 பேர் அமர்வதற்கான இருக்கைகள் இருக்கின்றன. அது மட்டுமல்ல, அவர்கள் அந்த வாகனத்தில் பயணம் செய்யும்போது பலன்ஸ் தவறாமல் இருக்க பிடித்துக் கொள்ள கைப்பிடியும் இருக்கிறது. கால்களை வைத்துக்கொள்ள 'புட்ரெஸ்டும்' இருக்கிறது. இந்த மின்சார இரு சக்கர வாகனத்தில் 6 பேர் பயணம் செய்யலாம் என்பது மட்டும் சுவாரசியம் இல்லை. இதில் உள்ள பட்டரி மற்றும் மைலேஜும் மிகவும் முக்கியம். முழுமையாக சார்ஜ் செய்தால் 6 பேர் 150 கி.மீ. வரை பயணிக்க முடியும். இது மட்டுமல்ல, இந்த பட்டரி முழுமையாக சார்ஜ் ஏற 8 – 10 ரூபாய் மட்டுமே செலவாகும். அப்படி என்றால் வெறும் ரூ.10 செலவில் 150 கி.மீ பயணிக்க முடியும். அதுவும் 6 பேர் பயணித்தால் ஒரு நபருக்கு வெறும் ரூ.1.66 தான் செலவாகும். இவ்வளவு குறைந்த செலவில் 150 கி.மீ. தூர பயணம் என்பது இதுவரை எந்த வாகனத்திலும் சாத்தியமில்லை. ஆனால், இந்த மின்சார இரு சக்கர வாகனத்தின் வேகம் குறித்த தகவல்கள் இல்லை. அதேவேளையில் இந்த வீடியோவில் மேலும் சில அம்சங்கள் இருப்பதைக் காண முடிகிறது. ஸ்கூட்டரின் முன்பக்கம் எல்.இ.டி. விளக்கு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இது முன்பகுதி விளக்காக வேலை செய்யும். இரவு நேரங்களில் பயன்படுத்த இது உதவும். அடுத்தாக மிக முக்கியமாக சஸ்பென்சனை பொறுத்தவரை முன்பக்கமும், பின்பக்கமும், டெலஸ்கோபிக் போர்க் சஸ்பென்சன்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் பள்ளம், மேடு மற்றும் சாலைகளில் வேகத்தடைகள் இருந்தாலும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பயணிக்க முடியும்.

இந்த மின்சார ஸ்கூட்டர் பார்க்க நன்றாக இருந்தாலும் இது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லை. 6 பேர் அமரும் அளவிற்கு நீளமாக இருப்பதால் இந்த ஸ்கூட்டரை திருப்புவது கடினம். வேண்டும் என்றால் இதை நீண்ட நிலப் பரப்பு கொண்ட உள் கட்டமைப்பு பயன்பாட்டிற்காக பயன்படுத்தலாம் அல்லது பெரிய மால்களில் சிறுவர்கள் ஓட்டுவதற்காகப் பயன்படுத்தலாம் என்கின்றனர் வாகனத்துறை நிபுணர்கள்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## 'நின்னு வினா, நின்னு வினா' – கச்சேரிகள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 210

நாட்டை விட்டு, முக்கியமாக 1983, 1990 களில் வெளியேறியவர்களில் பலர், தாங்கள் சென்றடைந்த நாடுகளில் எத்தனையோ விதமான, 'ஊரில் தாங்கள் ஏறெடுத்துப் பார்க்க விரும்பாத' வேலைகளை வாழ்வாதாரத்துக்கான பணிகளாக ஏற்று, உழைப்பால் தங்களையும் காப்பாற்றி, நாட்டில் இருந்த தங்களது உறவுகளுக்கும் முதுகெலும்பாக இருந்தவர்கள். ஆங்கிலம் பேசுவதை தவிர்ந்த மற்ற ஐரோப்பிய நாடுகளில் அவர்களுக்கு இருந்த மொழிப் பிரச்சினை, தாங்கள் படித்த படிப்புகள், தகமைகள் அவ்வாறான நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்படாதமை போன்ற பல வகையான தடங்கல்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தும், செய்யும் தொழிலே தெய்வம் என்ற மனப்பான்மையோடு உழைத்து முன்னேறினார்கள். தொடக்க நாள்களில், அவர்களது வாழ்க்கை தரங்கள் உயர, இவர்களின் பலர் விடுதலை குழுக்களுக்கு தூள் கடத்துகிறார்கள், அதன் விநியோகங்களில் இருக்கிறார்கள், கிரெடிட் கார்ட் மோசடிகள் என்று சிலரை அடையாளம் காட்டி, பிரசாரங்கள் அரசாங்கத்தால் செய்யப்பட்டன. ஒரு




சிலர் தன்னலங்களுக்காக இவற்றில் ஈடுபட்டு, வாழ்க்கையை சிதைத்து, அந்த நாடுகளில் சிறைக் கம்பிகளை எண்ணிய சம்பவங்கள் இருந்தாலும், பெருவாரியாக தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாம் அவர்கள் கடும் உழைப்பாளிகள், திறமைசாலிகள் என்ற பெயரை தக்க வைத்து, அந்த மதிப்புகளுடனேயே வாழ்கிறார்கள்.

தயாவைப் பற்றி பதிவின் பின் பேசிய சில நண்பர்கள், இயக்கத்தின் தொடக்க நாள்களில் இருந்தே அவர்களுடன் இணைந்து, பிரபாகரனின் நேரடிப் பார்வையில், அதன் பணிகளில் பங்கு பற்றிக் கொண்டு, தனது கடும் உழைப்பினால் பொறியியல் பட்டதாரியாகி, அதன் சேவகளைப் போராட்டக் களத்திற்குத் தந்தவர். பிரான்ஸில் உள்ள நாட்டின் பழைய மாணவர் சங்கங்களை ஒன்றிணைத்து, அதன் மூலம் நாட்டில் உதவிகள் தருவதை முன் நின்று செய்வதோடு, அரிசி வியாபாரத்தில் முதலீடு உண்டு, ஆனால் முகநூல் பதிந்தவர்கள் காழ்ப்புணர்விலும் தங்களது இயலாத் தன்மையிலும் இப்படி எழுதியிருக்கிறார்கள் என விசனப்பட்டார்கள்.

இப்படித் தொழில்களை அடுத்து, கேவலப்படுத்தும் குறி சுடுபவர்கள் செய்த, செய்யும் வேலைகளையோ தொழில்களையோ மற்றவர்கள் பதிந்தால் எப்படி இருக்கும் எனக் கேட்டார்கள். அவை நியாயமானவை.

தமிழ் உரிமைப் போராட்டத்தில் அக்கறை கொண்டவர்களின் ஆதங்கங்களே, இந்தக்




காழ்ப்புணரவுகளின் வெளிப்பாடுகள், பழையபடி அவர்களை எங்கே கொண்டு செல்லும் என்பதும், இத்தகைய மனோபாவங்கள் முன்னைய காலக்கிரமங்களில் பொறுப்புணர்வுகளுடன் செயல்படக்கூடிய எத்தனையோ புத்திஜீவிகளைப் புறந்தள்ளின, அதுவே திரும்ப தொடர போகின்றதோ என்கின்ற அக்கறை தான்.

விடுதலைப் பாதையின் வழிகள், அவற்றின் விளைவுகள், அவை தமிழ் மக்களை எங்கே கொண்டு வந்து விட்டிருக்கின்றன, இங்கிருந்து மேற்கொண்டு போவதற்கு (மிலிதுலிஸள லிஜ) இவற்றிலிருந்து சமைக்கப்பட வேண்டிய வழிகள் என்பவற்றுக்கான சுய விமர்சனங்களுக்காக இந்த ஆவணங்களும் வரலாறுகளும் அமைய வேண்டுமே ஒழிய, தனிமனித மகோன்னதங்களுக்கும் அவர்களின் பிரதாபங்களுக்குமாக இருப்பது தமிழ் மக்களின் வரலாற்று இலக்கியங்களில் கலிங்கத்துப் பரணிகளாகலாம். அவ்வளவே. விடுதலை பாதையின் யதார்த்தமான வழிகளுக்கான பார்வை பற்றியதற்கு இவை உதவ வேண்டுமே ஒழிய, நடந்தவற்றை தொடர்ந்து செய்து கொண்டு, அவை அர்ப்பணிப்புகளோடு தம்மால்தான் முன்னெடுக்கப்படுகின்றன, தாங்கள்தான் அவற்றுக்கு அருகதை உள்ளவர்கள் என்ற மனோபாவங்கள் எதனையும் வளர விட போவதில்லை.


இலட்சியம் ஒன்றுதான், பாதைகள் மாறலாம். ஆனால் பாதைகளின் மாற்றம் ஆயுதப் போராட்டத்தை தவிர்ப்பது என்பது மட்டுமல், சர்வதேச பின்னணிகளில் சாதுரியமான, யதார்த்தமான வழிகளை அமைப்பதாக வேண்டும். அந்த வழிகள் லட்சியத்தை நோக்கி நகர்ந்து, அவற்றை அடையக் கூடியவையான நம்பிக்கைகளைத் தர வேண்டும். தொடர்ந்தும் தமிழ் மக்கள் சர்வதேசங்களுக்கு பிரபாகரன்தான் தங்களது ஏகோபித்த தலைவர், விடுதலை புலிகளே அவர்களது மார்க்கம், அவரும் அவர்களும் பாதிக்கப்பட்டவர்கள், ஏமாற்றப்பட்டவர்கள், அழிவுகளுக்கு ஆட்படுத்தப்பட்டவர்கள் என்ற கீர்த்தனங்களிலேயே தொடர்வது, செம்மங்குடி பாகவதரை விட்டால் கர்நாடக கச்சேரிக்கு யார், அவர் ஒருவரே தான் என்பதையே திரும்பத் திரும்ப பிரஸ்தாபப்படுத்தி, மற்றவர்கள் யாவரும் கச்சேரிகளுக்கு அருகதை அற்றவர்கள் என்பது என்ன பலனைத் தர போகிறது? இல்லாவிட்டால், தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அர்ப்பணிப்புகள் விழலுக்கு இறைத்த நீராகவே ஆகும்.

விமர்சகர் சுப்புடு கூறுவது போல, இன்னும் நம்முடைய பாகவதர்கள் 'நின்னு வினா, நின்னு வினா' என்று விடாமல் அதே பாட்டுக்களில் கச்சேரி செய்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? புதிய தலைமுறைகளாவது, மக்கள் சலிக்காமல் சர்வதேசமும் நின்று கேட்கக்கூடிய பதங்களையாவது பாட வேண்டாமா? அதனை புலம்பெயரின் தலைமுறைகள் புரிந்து கொள்ள வேண்டும்.

### புலம்பெயர் நிதியில் பங்கு

நண்பர் ஒருவர் இன்னும் ஒரு முகநூல் பதிவினை அனுப்பி இருந்தார். அதனை பதிந்தவர் "ட்ரில்லியன் ரூபாய் வரையில் வந்த வெளிநாட்டு பணம்" என்ற தலைப்பில் "வெளிநாட்டு காசு இங்கே உள்ள எம்மவரைச் சீரழித்து விட்டது" என்ற இப்படி ஒரு பிரசாரம் தொடர்கிறது. ஊனை உருக்கி, உயிரை ஒறுத்து எம்மவர் அனுப்பும் பணம், இங்கே என்னென்ன நன்மைகள் செய்கிறது பாருங்கள். வெளிநாட்டு காசு பலரின் வாழ்வைச் சீரழித்துள்ளது என 40க்கு மேற்பட்ட உதாரணங்களைத் தந்து, தன்னால் உணரப்பட்டவற்றைப் பட்டியலிட்டு உள்ளார் எனவும், தான் குறிப்பிடாதவை இருந்தால் குறிப்பிடுங்கள் எனவும் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்பட்டது. முன்னைய பதிவின் அனுபவத்தில் இவர் குறிப்பிட்டவையின் உண்மை தன்மைகளை ஆராய்ந்துதான் பதிவிட வேண்டுமோ என்ற குழப்பம் இயற்கையாகவே இருந்தது. பின்னர் அது பெறுபவரை பொறுத்தது, முற்றும் முழுக்க உண்மையற்ற ஒன்றை வீம்புக்காக பிரச்சாரப் படுத்தாமல் பகிரலாம் என அறிவு சொன்னது.

அந்தப் பதிவினை இட்டவர் 39 ஆவது பந்தியாக "என்ன இடர் வந்தாலும் வெளிநாட்டில் உள்ள உறவுகள் கை கொடுப்பார்கள், நாம்



விழுந்து விட மாட்டோம் என்ற தன்னம்பிக்கை உள்ள மக்கள் கூட்டம் இங்கு வாழ்ந்து வருகிறது" – என்று கூறுகின்றார். ஆயினும் அவ்வளவு நன்மையிலும், வாள்வெட்டுக் குழுக்களிடையே இருக்கும் மோட்டார் சைக்கிள்கள், சமூகத்தின் இளம் சந்ததி இடையே வளரும் போதைப் பொருள் பாவனை, பாலியல் குற்றங்கள், உழைப்பை நாடாத மனோபாவம் என்பவற்றுக்கெல்லாம் புலம்பெயர் பணம் பின்னணியில் இருந்து உந்துகிறது எனப் பல ஊடகங்களும் சமூக ஆர்வலர்களும் அங்கலாய்க்கிறார்கள். இவற்றை விவஸ்த்திகளை அறிந்து உதவிகள் தரும்படி புலம் பெயரைக் கோருகிறார்கள். மிக அண்மையில் என்னுடன் செவ்வியில், மனித மேம்பாடுகளில் ஈடுபட்டுள்ள சமூகத் தலைவர், ஏறத்தாழ பன்னீராயிரம் குழந்தைகள் சமூக நலன் பாதுகாப்பில் இருக்கின்றன என்றும், அதற்கு காரணம் அந்த குழந்தைகளின் பெற்றோர் போதை வஸ்துகளுக்கு அடிமைப்பட்டு இருப்பதுதான் என்றும் சுட்டிக்காட்டினார்

இப்படி மலை போல் நம்பி இருக்கும் புலம்பெயர் சமூகம், இந்த மக்களை கைவிடாது, விரக்தி அடைந்த அவர்களின் நம்பிக்கைகளைத் தகர்க்காமல், விலத்தியிருப்பவர்களையும் கருத்து வேற்றுமைகளில் வேறுபட்டு இருப்பவர்களையும் அரவணைத்து, சாதுரியமான, யதார்த்தமான வழிகளுக்கான கட்டமைப்புகளை ஏற்படுத்தாது, தங்களுக்குள்ளேயே யார் பெரிது, விடுதலை புலிகளது, அன்றில் பிரபாகரனுக்கு உயிலுக்கு யார் வாரிசுகள் எனப் பொது வெளிகளில் அடிபடுவதும், ஏகோபித்த தலைமைதான் நினைக்க வேண்டும் என அடம் பிடித்து, அவை முகநூல்களில் வீம்புக்காகவும், பழிவாங்கலுக்குன் தரம் குறைவாக, அர்ப்பணிப்புடன் ஈடுபடுபவர்களின் பணிகளைப் பார்க்காது பதிவதும், பிரச்சாரப்படுத்துவதும், மக்களுக்கு எவ்வளவு ஏக்கங்களைத் தருகின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் விமர்சனப் பார்வைகள் இரண்டு வகையாகவே, நான் முன்னர் கூறியபடி இருந்து வருகிறது. ஒன்று – முழுக்க முழுக்க தாக்குவது. அது கருத்துக்களை மாத்திரமல்ல, அதனைக் கூறியவரையும் கூட. 'அவனை தெரியாதோ', 'அவன்', 'இவன்' என்ற பாணியில். மற்றது – புரிந்து கொண்டோ, இல்லையோ விவஸ்தை இல்லாமல், ஒருவர் எல்லாம் தெரிந்தவர், அவர் பேச்சுக்கு மறு பேச்சில்லை என்று உச்சிக்கோப்பில் அவர் தான் எனத் தூக்கி பிடிப்பதும் பழமையானவை. தியாகிகளும் துரோகிகளும் பிறந்தது இந்தப் பார்வைகளில்தான்.

'அம்மாளைக் கும்பிடுகிறார்கள்', 'வில்லுக் குளத்துப் பறவைகள்' என்று இந்திய ஆக்கிரமிப்பு படைகளின் காலங்களில் செய்யப்பட்ட அநீதிகள், அட்டூழியங்களின் உண்ந்த் தன்மையில் புனையப்பட்ட கதைத் தொகுதிகளைப் பற்றி முன்னர் குறிப்பிட்டு இருந்தேன். அவை உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன் போராட்ட காலங்களில் – காடுகளிலும் மறைவிடங்களிலும் வாழ்ந்த காலங்களில் – விடுதலைப் புலிகளின் கொள்கை பரப்பு பிரச்சார ஊடகங்களுக்கு எழுதியவை என அவருடன் நெருங்கிய தொடர்புள்ளவரின் தகவல் கிடைத்தது. அந்த ஆக்கங்கள், இந்தியா,அதன் அமைதிப்படை பற்றிய ஒரு பார்வை. இன்று காசி ஆனந்தன் இந்தியாவில் சென்னையில் அவர்களின் அரவணைப்பில், அனுசரணையில் அகதியாக வாழ்கிறார். அவர்கள் பற்றிய பார்வைகள் மாறுபட்டிருக்கும்.

'வாழ்க்கையே ஓடம் போல' என திருச்சி லோகநாதனின் பிரசித்தமான பாடல் ஒன்று உண்டு. ஆகவே பார்வை விசாலமாக வேண்டும். நடக்கும்போது கிடைக்காத செருப்பு, படுத்து கிடக்கும் போது கிடைத்தும் பலன் இல்லை.

(வளரும்....)

## புதுவருடத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. அது திடீரென முன்நகர்த்தப்பட்டுள்ளது.

புதிய முடிவின்படி ஜனவரி 5 ஆம் திகதி காலை 9.30 மணிக்குப் நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரையான காலப்பகுதி புனர்வாழ்வுப் பணியகச் சட்ட மூலம் மற்றும் குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலம் ஆகியவற்றின் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதங்களை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இதன் பின்னர் பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

அதேநேரம், முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய இன்றையதினம் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வட - கிழக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1,660 ஆக அதிகரித்துள்ளதாக விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் உயிரிழந்த விலங்குகளில் 691 மாடுகள் மற்றும் எருமைகளும் 296 ஆடுகளும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வட மாகாணத்தில் 182 மாடுகள் மற்றும் 147 ஆடுகள் உட்பட 329 நோய்வாய்ப்பட்ட விலங்குகள் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உயிரிழந்த மாடுகளின் எண்ணிக்கை 511. அந்த மாகாணத்தில் 44 எருமை மாடுகள் மற்றும் 108 ஆடுகள் உயிரிழந்துள்ளன.

மேலும், கிழக்கு மாகாணத்தில் மேலும் ஒரு எருமை மாடு மற்றும் 15 பசுக்கள் நோய்வாய்ப்பட்டிருக்கின்றன என விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலங்குகளின் மரணங்கள் தொடர்பில் பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கையை தமக்கு வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## யாருடனும் கூட்டுக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கொள்கை ரீதியில் வேறுபாடு உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்காகவும், நாட்டின் எதிர்காலத்திற்காகவும் எத்தரப்பினருடனும் ஒன்றிணையத் தயார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைக்கும்,எமது அரசியல் கொள்கைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கூட்டணிய மைக்கப்பட்டால் நிச்சயம் ஒன்றிணைவோம்.

நாட்டின் நலனுக்காக அரசியல் கட்சி கொள்கையில் மாற்றம் ஏற்படுத்துவதில் தவறேதும் கிடையாது. சிறந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களுக்கு ஒருபோதும் பின்வாங்க போவதில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசியல் ரீதியில் விட்டுக் கொடுப்புடன் செயற்படுகிறது.

விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கும் எதிர்தரப்பினர் சவால்களையும் ஏற்றுக் கொள்வதற்கு தைரியமில்லாதவர்கள். வெறும் குற்றச்சாட்டுக்களை முன் வைத்துக் கொண்டிருந்தால் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது.

நாட்டின் நலனை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்துள்ளோம். - என்றார்.

## விபத்தை ஏற்படுத்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுபாய்க்குத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

24 வயதுடைய வர்த்தகரான மொஹமட் ரைசுல் ரிசாக் - என்ற சொகுசுக் காரை செலுத்திய சாரதி, சனிக்கிழமை காலை 9.55 மணியளவில் டுபாய்க்கு சென்றுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சந்தேகநபரின் பெயரில் மூன்று மேர்சிடீஸ் பென்ஸ் சொகுசு கார்கள் இருக்கின்றன எனவும், அந்த வாகனங்களுக்கான பணம் டுபாயில் இருந்து பெறப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரின் தாயாரிடமும் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர் எனவும் சந்தேக நபரை அழைத்து வருவதற்கு இன்டர்போல் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர் எனவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இரவுவிடுதியில் இருந்து சனிக்கிழமை காலை திரும்பிக்கொண்டிருந்த சொகுசு கார் கொள்ளுப்பிட்டியில் ஓட்டோ மீது மோதியதில் 58 வயதுடைய ஓட்டோ சாரதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய கடற்படைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் ஒன்று நிறுத்தப்பட்டதை அடுத்து, புதுடெல்லிக்கும் கொழும்புக்கும் இடையே இராஜதந்திர ரீதியில் தகராறு ஏற்பட்டு சுமார் நான்கு மாதங்களுக்குப் பிறகு இந்த விஜயம் வந்துள்ளது.

கடற்படைத் தளபதி அட்மிரல் ஆர் ஹரி குமார், டிசம்பர் 13 முதல் 16 வரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

## தேர்தலுக்கு உத்தரவிடக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இரண்டு ரிட் மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியவர்களினால் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மற்றைய மனு தயாசிறி ஜயசேகர, லக்ஸ்மன் கிரியெல்ல, அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் எம்.ஏ சுமந்திரன் ஆகியவர்களினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதமர் ஆகியோர் குறித்த மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுக்களை நாளை புதன்கிழமை அல்லது அடுத்தநாள் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

## ஜன. நடுப்பகுதியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரும் அறிவித்தலை இவ்வருடம் டிசம்பர் 26 முதல் 30ஆம் திகதிக்கு இடையில் வெளியிடுவதற்குத் தீர்மானித்தது, என்றுபுஞ்சிஹேவா நேற்று தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஜனவரி நடுப்பகுதியில் ஏற்றுக் கொள்ளப்படும். 2017 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கட்டளைச் சட்டம் 2017 இன் விதிகளின்படி 2023 பிப்ரவரி பிற்பகுதியில் தேர்தல் நடத்தப்படும்.

வேட்புமனு தாக்கல் முடிந்து ஐந்து வாரங்கள் முதல் ஏழு வாரங்களுக்குள் உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அவசரச் சட்டத்தின் 26வது பிரிவு கூறுகிறது.

வேட்புமனுக்கள் அறிவிக்கப்பட்ட 14 நாள்களுக்கு மறுநாள் மதியம் 12.00 மணி வரை பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களால் ஏற்கப்படும்.

## வாள்கள், கூரிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையின் போதே குறித்த சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மீட்கப்பட்ட ஆயுதங்களுடன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில், பாரப்படுத்தப்பட்டார்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622









# சர்வதேச ரோட்டரிக் கழகத் தலைவர் ஜெனிபர் ஜோன்ஸ் இலங்கை விஜயம்

சர்வதேச ரோட்டரியின் தலைவர் ஜெனிபர் ஜோன்ஸ் 4 நாள்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் உலகின் தலைசிறந்த சேவை அமைப்பான ஐ.நா. உலகளவில் ரோட்டரி இன்டர்நேஷனலின் முதல் பெண் தலைவராவார் ஜெனிபர் ஜோன்ஸ்.

இவர் கனடாவின் ஒன்டாரியோவை தளமாகக் கொண்ட இருபத்தைந்து விருதுகளைப்பெற்ற ஊடக நிறுவனமான மீடியா ஸ்ட்ரீட் புரொடக்ஷன்ஸ் இன்க் இன் நிறுவனர் தலைவர் ஆவார்.

இவரது திறமைகள் உலகளவில் ரோட்டரிதாக்கத்தை வலுப்படுத்தியதுடன் ரோட்டரி அறக்கட்டளை தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல் துணைத் தலைவர் மற்றும் 'எண்ட் போலியோ நவ் மேக் ஹிஸ்டரி டுடே பிரசாரத்தின் இணைத் தலைவர் போன்ற ரோட்டரியின் படிநிலையில் முக்கிய பங்கு வகித்துள்ளார் ஜெனிபர் ஜோன்ஸ்.

வாயில்கள் மற்றும் அவற்றின் அடித்தளம். ஒரே நாளில் போலியோ ஒழிப்புக்காக 5.25 மில்லியன் டொலர்களை ஈட்டிய அமெரிக்காவின் புளோரிடாவில் ஜாக் நிக்லாஸுடன் இணைந்து ரோட்டரி போலியோ கோல்ப் தினத்தை 'அனுபவ நிதி திரட்டியதற்காக' ரோட்டரி உலகில் ஜெனிபர் மரியாதை பெற்றார்.

அரசியல் பிரமுகர்கள், பிரபலங்கள் மற்றும் உலகத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றும் ஜெனிபர் ஜோன்ஸ், விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அமைதியை ஏற்படுத்தவும், வளரும் நாடுகளில் சுத்தமான தண்ணீர் மற்றும் சுகாதாரத்தை வழங்கவும், நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை திரட்டவும் தனது குரலைப் பயன்படுத்துகிறார். கதை சொல்லும் அவரது நிபுணத்துவம் நம்பிக்கையையும் வாக்குறுதியையும் தூண்டுகிறது மற்றும் மக்களை நடவடிக்கை எடுக்க தூண்டுகிறது.

பல விருதுகள் மரியாதைகள் மற்றும் அங்கீகாரங்களில் சில ரோட்டரியின் சேவைக்கு மேல் சுய விருது, மெரிட்டோரியஸ் சேவைக்கான மேற்கோள், ஒய்.எம்.சி.ஏ. அமைதிப் பதக்கம், குயின்ஸ் டயமண்ட் ஜூபிலி மெடல் ஆகியவை அடங்கும்.

முதலாவது மகளிர் சர்வதேச ரோட்டரி ஜெனிபர் ஜோன்ஸ், இலங்கையில் பல முக்கிய திட்டங்களை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தவுள்ளதுடன், இலங்கையின் ரொட்டேரியன்கள், இளம் ரோட்டராக்டர்கள் மற்றும் ஆற்றல்மிக்கவர்கள் செய்து வரும் நல்ல பணிகளைத் தொடர ஊக்குவிக்கவுள்ளார்.

ஜெனிபர், பாலின பன்முகத்தன்மை மற்றும் கூட்டாண்மை, தனியார் துறையின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பொறுப்பின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்த இலங்கை பங்குச் சந்தைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யுனிசெவ் உடன் இணைந்து ரோட்டரி மூலம் இலங்கை மக்களுக்காக நிதியளிக்கப்பட்ட ஒரு கோடி டொலர் லைப் லைன் திட்டத்தில் தேவைப்படும் மருந்துப் பொருள்களை சுகாதார அமைச்சகத்திடம் ஜெனிபர் ஜோன் கையளிக்கவுள்ளார்.

இளைஞர்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, பிலிப்பைன்ஸில் உள்ள ஒரு வளாகத்தில் இருந்து 500 தகவல் தொழில்நுட்ப உதவித் தொகைகளையும் பிலிப்பைன்ஸில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து தேசிய இளைஞர் பேரவை, இளைஞர் விவகார அமைச்சின் கூட்டு நிறுவனத்துடன் ரோட்டரி வழங்கும். இறுதியாக சுகாதார அமைச்சுடன் இணைந்து புற்றுநோய் கண்டறிதல் மையத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ரோட்டரி உலகளவில் முன்னணி



சேவை அமைப்பாகும், மேலும் இலங்கையில் இது மிகவும் ஆற்றல் மிக்க மனிதாபிமான அமைப்பாகும், இது 'பெரும் பொருளாதார வீழ்ச்சியால் கடுமையான கட்டமைப்புகளை எதிர்நோக்கும் இலங்கையர்களுக்கு புதிய நம்பிக்கையை அளிக்கும் நோக்கத்தை கொண்டுள்ளது. ரோட்டரியில் நாங்கள் உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என இலங்கை ரோட்டரியின் மாவட்ட ஆளுநர் புபுது டி சொய்சா தெரிவித்தார்.

இலங்கை சுற்றுலாத்துறையுடன் இணைந்து நடத்தப்படும் 'சாரிட்டி பிளாக் டை டின்னரில்' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்வார் என ஜெனிபர் ஜோன்ஸ் இலங்கை விஜயத்தின் தலைவி கௌரி ராஜன் தெரிவித்தார்.

# தேர்தலை நடத்தினால் பெரு வெற்றியீட்டுவோம்!

## ரஞ்சித் மத்தும பண்டார அரசுக்கு சவால்

அரசாங்கம் தேர்தல்களை பிற்போடுவதற்குத் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முடிந்தால் உரிய காலத்துக்குள் நடத்துங்கள். ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் பெரு வெற்றியீட்டிக்காட்டுவோம். அத்துடன் அரசாங்கத்தின் பெரும்பான்மையை விரைவில் வீழ்த்துவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டாவது கட்சி சம்மேளனம் கொழும்பு – கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடு வங்குரோத்தடைந்துள்ளது. வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளன. அதேபோன்று நாட்டில் தொழில் வாய்ப்புகள் குறைவடைந்துள்ளன. ஆனாலும் அரசாங்கம் அடக்குமுறைகளை நிறுத்தவில்லை. இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு பாரிய பொறுப்புள்ளது.

நாட்டுக்கு இழைத்த நாசகார செயற்பாடுகளால் முன்னாள் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை என ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் மக்கள் பலவந்தமாக வெளியேற்றியிருந்தார்கள். ஆனால், மக்களால் வெளியேற்றப்பட்டவர்கள் அனைவரும் ஒன்றுகூடி மக்களின் குரலுக்கு செவிமடுக்காது மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரை ஜனாதிபதியாக்கினார்கள்.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வந்ததும் வெளிநாட்டில் இருந்து நிவாரணங்கள் கிடைக்கும் வரிசைகள் இல்லாது போகும் என மக்கள் பெரிதும் எதிர்பார்த்தார்கள்.

திருடர்களால் திருடப்பட்ட பணத்தை மீளக் கொண்டுவருவார் எனவும் எதிர்பார்த்தனர். ஆனால் இவை எதனையும் செய்யாத ரணில் விக்கிரமசிங்க, மக்களிடம் வரிச் சுமையை அதிகரித்துள்ளார். எரிபொருளின் விலை, மின்சாரக் கட்டணம் உள்ளிட்டவற்றையும் அதிகரித்துள்ளார். இதனால் மக்கள் மிகவும் கஷ்டத்துடனே வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர்.

மேலும் உள்ளூராட்சிமன்ற தேர்தலை



நடத்துவதற்கான தேர்தல் திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க உள்ளது. இவ்வாறான நிலையில் எல்லை நிர்ணயம், இளைஞர் பிரதிநிதித்துவம் என பல்வேறு நொண்டிச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கம் தேர்தலை காலந்தாழ்த்த சதி செய்துவருகிறது. உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடந்தால் அதில் எமக்கே பாரிய வெற்றி கிடைக்கும். முடிந்தால் உரிய காலத்துக்குள் தேர்தலை நடத்துங்கள். ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் பெரு வெற்றியீட்டிக்காட்டுவோம்.

ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்குக் கிடைத்த 69 லட்சம் வாக்குகள் 10 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்திக்கு 55 லட்ச வாக்குகள் கிடைத்தன. ஏனைய கட்சிகளுக்கும் 2 – 3 லட்ச வாக்குகள் கிடைத்தாலும் அக்கட்சிகளால் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகளைப் போல பெற முடியாது. எனவே அரசாங்கம் மக்கள் ஆணையை இழந்துள்ளது என்பது நாடாளு மன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கு 157 வாக்குகளையும், இடைக்கால ஜனாதிபதி தெரிவின் போது 134 வாக்குகளும் அரசாங்கத்துக்குக் கிடைத்திருந்தன. ஆனால் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில் அரசாங்கத்துக்கு வெறும் 123 வாக்குகளே கிடைத்துள்ளன. எனவே அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலத்தை இழப்பதற்கு இன்னும் 10 வாக்குகளே இல்லாது செய்யப்பட வேண்டும். எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய கட்சிகளுடன் இணைந்து நாம் அரசாங்கத்தின் பெரும்பான்மையை மிக விரைவில் இல்லாமல் செய்வோம். – என்றார்.

# உண்மைகளை ஆராயாமல் கருத்துகளை தெரிவிக்காதீர்!

## கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள்



கிராஞ்சி கடலட்டைப் பண்ணைகள் தொடர்பாகவும், அதற்கு எதிராக, மேற்கொள்ளப்படுகின்ற போராட்டம் தொடர்பாகவும் உண்மை நிலைவரங்களை ஆராயாமல் கருத்துக்களை வெளியிட வேண்டாம் என கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிராஞ்சி ஸ்ரீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த. மகேந்திரன், கிளிநொச்சியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுமார் 266 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்ற கிராஞ்சிக் கிராமத்தில் 203 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட திணைக்கத்திடம் விண்ணப்பித்து விட்டு நீண்ட நாள்களாகக் காத்திருக்கின்றோம்.

இவ்வாறு விண்ணப்பித்து இருக்கின்றவர்களுள் 40 கடற்றொழிலாளர்களால் 40 பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பண்ணை அமைத்துள்ளவர்கள், பாரம்பரியமாக தாங்கள் சிறகு வலைத் தொழிலை மேற்கொண்டு வந்த இடங்களிலேயே பண்ணைகளை அமைத்துள்ளனர்.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பண்ணைகளையே சட்டவிரோதப் பண்ணைகளாக சிலரால் சுட்டிக்காட்டப்படுவதுடன், அதனை அகற்றுமாறு போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி பண்ணைகள் தங்களால் பாரம்பரியமாக சிறகு வலைத் தொழில் மேற்கொள்ளப்பட்டு வந்த கடல் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்த விடயத்தில் அக்கறை செலுத்துகின்றவர்கள் யாராக இருந்தாலும், நேரடியாக வந்து ஆய்வுகளை மேற்கொண்டால் உண்மைகளை அறிந்து கொள்ள முடியும்.

எம்மால் அமைக்கப்பட்டிருக்கின்ற கடலட்டைப் பண்ணைகள் அனுமதி பெற்றுக்கொள்ளப்படாத சட்டவிரோத பண்ணைகள் என்று தெரிவிக்கின்றவர்கள், தாங்கள் மேற்கொண்டு வருகின்ற சிறகு வலைத் தொழிலை எந்தவிதமான அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளாமல் சட்டவிரோதமாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

அதைவிட, எமது பண்ணைகளுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூவரில் ஒருவர் பினாமியின் பெயரில் பாரிய கடலட்டைப் பண்ணையை செயற்படுத்தி வருகின்றார் என்ற உண்மையையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அதனை நிரூபிப்பதற்கான ஆவணம்கூட எம்மிடம் இருக்கின்றது.

ஆக, கடந்த காலங்களில் எமது பகுதியில் தொழில்சார் ஆதிக்கத்தினை செலுத்தி வந்த சிலர், தமது குடும்பங்களின் ஆதிக்கத்தினை தக்கவைத்துக் கொள்வதற்காக, மக்களையும் அரசியல் தலைவர்களையும் திசை திருப்பும் வகையில் ஆநீதியான முறையில், கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது போன்ற தோற்றத்தினை ஏற்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான பொய்ப் பித்தலாட்டங்களை நம்பிய சிலர், அவர்களுக்கு ஆதரவாக தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபடுவதன் மூலமே, எமது நியாயமான கோரிக்கைகளுக்கும் யாரையும் பாதிக்காத எமது வாழ்வாதாரத்துக்கும் அனைவரினதும் ஆதரவு கிடைக்குமாயின், எம்மால் 800 இற்கும் மேற்பட்ட கிராஞ்சி மக்களை ஒன்றுதிரட்டி போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். – என்று தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2022இல் வெளியிடப்பெற்றது.